# கோபாலப்புரத்துக் கோகிலமே!...

## கொற்றவன் கதறியழப் போய் விட்டாயா?.....

இந்தித் திணிப்புப் போரில் களங்கள் கண்ட கழகக் காளை தமிழ்மொழி காக்கும் போர்ப் படையின் மாணவ மறவர்! சட்டக் கல்லூரியில் கழகத்திற்கென மாணவப் பட்டாளத்தை உருவாக்கிக் காட்டிய மாண்பாளர்! திராவிட இயக்கத்தில் திகட்டாத தென்மொழி எழுத்தாளர்! தமது எழுத்துப் பணியில் ஆள வந்தார்களுக்கு அடிப்பணியா அரிமா! தவறு இழைப்போரைத் தமது எழுதுகோலால் தண்டிப்பதில் தலை தாழாச்சிங்கம்! வரிசை கட்டி வந்த வார்த்தைப் பகைவர்களைத் தமது எழுதுகோல் வாளால் பந்தாடிய வணங்காமுடி! நெருக்கடி நிலையில் நிலைகுலையா நெஞ்சக் குன்றம்! சர்வாதிகாரிகளின் சட்டமன்றக் கூண்டில் ஏற்றப்பட்ட போதும் முரசமாய் ஒலித்த சங்க நாதம்! ஜனநாயகம் காக்க வலிமை மிகு வாதங்களால் முரசொலித்து வென்ற வல்லமையாளர்! தமது சித்திர எழுத்துக்களால் சீர்திருத்தம் கண்ட சிங்கார நடையாளர்; அன்றாடச் செய்தியாய் அரங்கேற்றும் உரையாடல்களில், கட்டுரைகளில், நாடகங்களில் நக்கல் நையாண்டி கலந்து தந்த நவரச நாயகர்! கருத்தோவிய எழுத்துக்களால், எதிரிகளைக் காயப்படுத்தாமல் “நச்” என்று, நாகரிக விமர்சனம் செய்து வந்த சிலந்தியார்! பெரியார், அண்ணாவின் பகுத்தறிவு நடைபயின்ற பண்பாளர்! சனாதன எதிர்ப்புச் சண்டமாருதப் போராளி! தீந்தமிழர் போற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்! உணர்வுமிக்க பல பரப்புரைச் செய்திகள் தந்து கொண்டிருந்த, உறக்கம் கொள்ளா ஊடகவியலாளர்! அனைவரிடத்தும், அரவணைப்பு, அன்புப் பாராட்டிப் பழகும் பரந்த குணத்தால் கடலைப் போல அமைதியானவர்! அச்சமில்லா அறிவினில் அடக்கம் நிறைந்தவர்! சிட்டுக்குருவிகள் கூடு கட்டும் அவர் அடிக்கடி பேச்சினிடையே முறுவலிக்கும் மோனலிசா புன் சிரிப்பாளர்!

பேரறிஞர் அண்ணாவின் நட்பில் பெருமை கொள்ளத்தக்க பிழையிலாச் சீடர். காவிரிக் கரை நீண்டெழும் தஞ்சை மண் தந்த கலைஞரின் மருமகனார்! முத்தமிழ் அறிஞரின் மகளார் செல்வி பெற்ற வாழ்வியல் இணையர்! மூச்சு தோறும் முன்னேற்றக் கழகக் கொள்கையைப் பரப்பி வந்த முரசொலி மாறனாரின் ஆருயிர் இளவல்! தளபதியாரின் கருத்துப் பரிமாற்றங்களுக்கு வடிகாலாக இருந்த வாஞ்சைமிகு வசிட்டர்! கலைஞர் குடும்பத்தில் எஞ்சிய கலைஞர்!கொடிமரம் காத்துக் கொள்கை வழி நின்ற கோபாலபுரத்துக் கொஞ்சும் புறா! இப்படிப் பன்முகம் படைத்த அண்ணன் முரசொலி செல்வம் என் வாழ்க்கையில் கிடைத்த ஐம்பது ஆண்டுக் கால அருமைச் செல்வம் அல்லவா?

“சர்க்காரியா கமிஷன் ஒரு சூழ்ச்சி வலை” எனும் நூலும், “சில நினைவலைகள்” எனும் நூலும், அவர் தீட்டிய கழக வரலாற்றில் வைரக் கல் பதிவின் கால வடுக்களின் அடையாள வழிகாட்டி! கழகக் கருவூலம் மறைந்து விட்டாரே! கதற, கதறக் கழகத்தவர் இதயத்தில் மரணம் எனும் பேரிடி இறங்கி விட்டதே! இயற்கைத் தாய் மடியில் பொன் சிறகு போர்த்தி உறங்கச் சென்று விட்டாரே! கிளை பரப்பி, இலை, தளிராய் விரிந்து, பூ, பிஞ்சு, காய், கனியாய் குலுங்கி, விழுது விட்ட விருட் சத்தின் வேரானது மண்ணில் மறைந்து வாழ்வது போல் வாழ்ந்து வந்த என் அண்ணனை நானும், கழகமும் இழந்து விடடோமே!

நாள் தோறும் அண்ணன், தம்பிகள் நாங்கள் இரண்டு, மூன்று முறையாவது தொலைப்பேசி அழைப்பில் பேசிக் கொள்வோமே!தலைவர் பேச்சைக் கேட்டீங்களா?நிகழ்ச்சிக்குச் சென்று இருந்தீர்களா? படித்தீர்களா? வேறு என்ன செய்தி? என்றெல்லாம் கேட்டுக் கேட்டு மனம் மருகுவாரே. இப்பொழுதுதான் என்னிடம் தலைவர் ஸ்டாலின் பேசினார்... என்றெல்லாம் சொல்லுவாரே! இறக்கும் முன்னர் இரவில் கூட ஆந்திர நடிகர் ஒருவர் பேசிய பேச்சின் விவரம் என்ன? அதற்குத் துணை முதல்வர் உதயநிதி அளித்த பதில் விவரம் என்ன? என்றெல்லாம் என்னிடம் கேட்டு, அவர் அறிந்து வைத்திருந்த செய்திகளுக்கு நான் சரியாகப் பதில் சொல்கிறேனா என்று வினவினாரே?... அடுத்து வரும் முரசொலியில் கட்டுரைக்குத் தயாரானாரே?... ஆனால் காலத் தேவதையின் கோரக் கரங்களின் பிடியில் படுக்கையிலேயே, அவரின் பூ போன்ற மென்மையான உயிரைப் பறித்துச் சென்று விட்டதே!

சிலந்தியார் எனும் பேரில் எழுதும் கட்டுரை ஒன்றினை முரசொலி ஏட்டில் “நிகழ்ச்சி ஒன்றின் மேடையில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள், முன்னாள் ஆந்திரா புதுவை ஆளுநர் தமிழிசை அவர்களை நடத்திய விதம் குறித்து, கடந்த ஜூன் மாதம் 19ஆம் தேதி “பதவிப் படுத்தும் பாடு” என்ற தலைப்பில் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதியிருந்தார். அதைப் படித்து விட்டுச் செல்பேசியில் நான் பேசினேன். பிறகு அவர் எழுத்தைக் கண்டு பெருமைப்பட்ட நான், அவரைப் பற்றியும் அவரது எழுத்தைப் பற்றியும் கவிதை ஒன்றைத் தீட்டி அனுப்பி இருந்தேன். அதனை அவர் படித்துவிட்டு, “நன்றி. வணக்கம் .சிறப்பான கவிதை. அந்த வரிகளுக்கு ஏற்புடையவனாக இருந்திட நான் முயற்சி செய்கிறேன். நன்றி.” என்று எனக்குப் பதில் தகவல் அளித்து இருந்தார். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக் கால நட்பில் நான் எதை மறப்பது? எதை விடுப்பது? இதோ அவரைப் பற்றி நான் எழுதிய அந்தக் கவிதை....

உரம்பல போடு கின்றீர்;
உளத்திடைக் கழகம் ஓங்க!
முரசொலி செல்வம் என்ற
முன்னேற்றக் கழகச் சொத்தே!
தரமிகு கருத்துக் கோலத்
தாக்கத்தை ஏற்ப டுத்தும்
வரம் தரும் எழுது கோலால்
வாழ்வெல்லாம் இனிக்கின் றீரே.!

அரசியல் பகைவர் தம்மை
அநீதி இலக்க ணத்தைப்
புரட்டியெ டுக்கும் அடிதான்!
புயல்தான்! பூகம் பம்தான்!
புரவியின் வீறு வீச்சால்
புண்ணாக்கும் உன்றன் சாட்டை!
புலம்பிடு எதிரிக் கூட்ட
வரம்பினைக் தகர்க்க காண்போம்!
வாய்மையால் வெல்வீர் வாழ்க!

நரம்பொலி விரல்கள் மீட்டும்
நாதத்தின் வீணை அன்ன;
பரம்பொருள் பெரியார், அண்ணா
பாதையை நெஞ்சில் போற்றிக்
கரம்பற்றிக் கலைஞர் நின்றார்!
கண்ணேஎம் செல்வம் அண்ணா!
சரமல்லிப் பூவின் வாசம்
தந்திட எழுது கின்றீர்!

எத்தனை வீச்சு! தங்கள்
எழுத்தெல்லாம் கழக மூச்சு!
முத்தினைக் கோத்த மாலை
முகவரி அழகே! என்றும்
சொத்துதான் இயக்கப் பாட்டே!
செகமது தழைக்க என்றும்
வித்தூன்றி வளரச் செய்யும்
விளைநெல் கழனி வார்ப்பே!

விரல்வலி யெடுக்க நாளும்
விழிஇரு பாவை நோக
முரசொலி ஏட்டில் எழுதி
முழக்கத்தை எழுப்பு வாய்நீ!
குரலொலி நாளும் வேண்டும்;
சிலந்தியார் எழுத்து கண்டே
கரவொலி எழுப்பு வாரே
கண்ட நம் தோழர் எல்லாம்!

சரவெடி போன்ற சீறிச்
சிரிக்கின்றீர்! உறுமு கின்றீர்!
சுரம்வர நைய மெல்லச்
சமயத்தில் புடைக்கின் றேரே!
சிரந்தாழ இழுத்துக் கையில்
குட்டவும் செய்கின் றீரே!
மரமண்டை மனித ருக்கு
மந்திரிக் கவும்செய் கின்றீர்!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

# இதழியல் மேதை முரசொலி செல்வம்!

எதற்கும் அஞ்சாத பேராளுமை மறைந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பதிவேடு எங்களை விட்டுப் பிரிந்தது.

எந்தச் சூழலிலும் முரசொலி நாளிதழ் கீழே விழாமல் தாங்கிப் பிடித்த நிர்வாக நிபுணர் மறைந்தார் .

சில ஆண்டுகளுக்கு முன் தேர்தலையொட்டி முரசொலிக்கு ஒரு கட்டுரை எழுதினேன். அதை அனுப்பும் முன்னர் முரசொலி செல்வம் அண்ணனிடம் காட்டி ஒரு ஒப்புதல் பெற் வேண்டி கலைஞர் தொலைகாட்சி அலுவலகம் சென்றேன்.

தனிமையில் படித்துக் கொண்டிருந்தார். என்னை அன்புடன் வரவேற்றவர் , நான் தந்த பிரிண்ட் அவுட்டை வாங்கி முழுமையாக படித்துவிட்டு, நிமிர்ந்து ‘‘நல்லாயிருக்கு! எந்த பத்திரிக்கைக்கு அனுப்பப் போறீங்க?”

“முரசொலிக்கு அனுப்பலாமான்னு கேட்க வந்தேண்ணா.. ”

உடனே ஒரு சிகப்புப் பென்சிலை எடுத்து சடார், சடார்னு கோடுகளாக போட்டுத் தள்ளினார். மறுபடியும் நிதானமாக படித்துப் பார்த்தார். பின்னர் திருப்பி என்னிடம் கொடுத்து, “இப்ப அனுப்புங்க. பாக்ஸ் பண்ணி போடச் சொல்றேன் ” என்றார்.

முரசொலிக்கு நான் எழுதிய முழுப் பக்கக் கட்டுரை ஐந்தே நிமிடங்களில் நாலு பத்தி பாக்ஸ் செய்தியாக மாறி விட்டது.

‘‘இவ்வளவுதானா அண்ணா வரும்” என்றேன்.

எனது வருத்தத்தைப் புரிந்து கொண்டவர், இங்க வாங்க என அருகில் அழைத்து அவர் சிகப்புக் கோடிட்டு நீக்கியிருந்த பத்திகள் ஏன் நாளிதழுக்கு அவசியமில்லை என்பதை விளக்கினார்.

“வாரப் பத்திரிக்கை படிப்பவனுக்கு கட்டுரையின் காண்டெக்ஸ்ட்டை நான் விளக்கமா சொல்லி ஆகணும். ஆனா, டெய்லி பேப்பர் வாசகனுக்கு எல்லாமே தெரியும். அவனும் நம்ம கூடவேதான் டிராவல் பண்றான். என்ன? நாம எழுதுறோம்! அவன் எழுதுறதில்லை. எனவே, ஒரு வரிகூட அவனுக்குத் தெரிந்ததை நாம எழுதி ரெண்டு பேர் நேரத்தையும் வீணடிக்கக்கூடாது. புரிஞ்சுதா?”

**கலைஞர் வளர்ப்பில்லையா?**

சிந்தனையில், பேச்சில், எழுத்தில் என அனைத்திலும் முழுமையான எடிட்டிங் அறிவை கொண்டிருந்த இதழியல் மேதை அவர் என்பது எனக்கு அப்போது விளங்கியது.

ஐந்து நிமிடங்களில் பெரும் இதழியல் பாடமே எனக்கு கற்றுத் தந்திருந்தார்.

ஒரு முறை பெங்களூர் வீட்டில் செல்வம் அண்ணனை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. வெகு நேரம் அரசியல் பேசி விட்டுப் புறப்படும் போது, வழியனுப்ப உடன் வெளியே வந்தார். அங்கே அவர் வீட்டு தெரு முனையில் சாகர் ஹோட்டல் ஒன்றிருந்ததை சுட்டிக்காட்டி எனக்கு அங்கு கிடைக்கும் பெங்களூர் தோசை, இனிப்பு சாம்பார் ரொம்ப பிடிக்கும் என வேடிக்கையாகச் சொன்னேன்.

சட்டென கட்டியிருந்த லுங்கியுடன் ‘வாங்க! போலாம்’ என என்னை கைப் பிடித்து அங்கே அழைத்துச் சென்று தோசை ஆர்டர் செய்து இருவரும் உண்ட அந்தக் கணத்தை வாழ் நாளில் மறக்க முடியாது.

எளிமை. திறமை. பணிவு என மூன்று சொற்களில் அவரின் ஆளுமையை சொல்லி விடலாம்.

கலைஞர் மருமகன், முரசொலி மாறனின் சகோதரர் போன்ற அடையாளங்கள் இல்லாமலேயே இதழியலில் தனித்த ஆளுமையாக திகழ்ந்தவர்.

ஜெயலலிதாவும், பி.எச்.பாண்டியனும் சேர்ந்து முரசொலி மீது உரிமைப் பிரச்சினை எழுப்பி, சட்டமன்றத்தில் விசாரணைக் கூண்டை அமைத்து அழைத்தபோது, சிங்கம் போன்ற துணிவுடன் சென்று அவர் அங்கே முழங்கியதை நாடு மறக்குமா? நாம் தான் மறப்போமா?

சரித்திரத்தில் இறவாப் புகழ் பெற்று விட்ட அண்ணன் முரசொலி செல்வமே! போய் வாருங்கள் அண்ணா!

உங்கள் நினைவுகளை கழகம் என்றென்றும் ஏந்தி நிற்கும்.

**எஸ்.கே.பி கருணா**
**மாநிலப் பொறியாளர் அணிச் செயலாளர்.**

### வார்டு செயலாளர் கே.ராஜேந்திரன் ஏற்பாட்டில்

# முரசொலி செல்வம் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

### கே.அசோகன் தலைமை! ந.கபிலன் சீனி.சின்னசாமி பங்கேற்பு!

*திண்டிவனம், அக். 12 -*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மருமகனும்-அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் சகோதரரும் தலைசிறந்த எழுத்தாளர் பத்திரிக்கையாளருமான முரசொலி செல்வம் அவர்கள் (10.10.2024) அன்று மறைவெய்தினார். விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகம் சார்பில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப் பட்டது.*

*முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.அசோகன் தலைமை வகித்தார்.*

*இதில் முன்னாள் நகரச் செயலாளர் ந.கபிலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி.சின்னசாமி எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. ராஜேஷ், எஸ்.பழனி, வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் டி.மோகன சுந்தரம்,*

*எச்.ஜெயராஜ், கே.விஜயகுமார், கே.கே.தாஸ், மேஸ்திரி ராஜேந்திரன், சிவப்பிரகாசம், கிருஷ்ணன், ராஜசேகரன், வேதமூர்த்தி, ராமசாமி, அன்பு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.*

*14வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.ராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்திருந்தார்.*

### ‘திராவிடியன் ஸ்டாக் ’ சார்பில் - ஆங்கில மொழிபெயர்ப்பில்

# அண்ணாவின் ‘நீதி தேவன் மயக்கம்’ உள்பட மூன்று நூல்கள் வெளியீடு!

### கோவை. இராமகிருட்டிணன் - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. - இராஜீவ் காந்தி பங்கேற்பு!

*சென்னை, அக்.12-*

*சென்னை அன்பகத்தில் இன்று (12.10.2024-சனிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு ‘திராவிடியன் ஸ்டாக்’ வெளியிடும் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.*

*சென்னை ‘திராவிடியன் ஸ்டாக்’ பதிப்பகம் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் ‘நீதி தேவன் மயக்கம்’ எனும் நூலை நெய்வேலி அசோக் ஆங்கிலத்தில் ‘லார்ட் ஆப் ஜஸ்டிஸ் நாக் அவுட்’ என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். அதேபோல் எம். எஸ். விஸ்வநாதன் ‘கர்ம வீரரும் கலைஞரும்’ என்ற நூலையும், ‘கன்சிராமின் கனவை வென்ற ‘திராவிட மாடல்’ என்ற நூலை த.மு. யாழ் திலீபனும் எழுதியுள்ளனர்.*

*இந்த மூன்று நூல்களும் சென்னை அன்பகத்தில் இன்று (12.10.2024-சனிக் கிழமை) மாலை 5.30 மணி அளவில் நடைபெறுகிறது.*

*இந்நூல் வெளியீட்டு விழா ‘திராவிடியன் ஸ்டாக்’ கௌதம் தலைமையிலும், வெற்றிச் செல்வன் வரவேற்புரையிலும் ச.குமரன், ஜனா விஜய் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*நூல்களை த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை. இராமகிருட்டிணன் வெளியிட்டு சிறப்புரை ஆற்றுகிறார்.*

*இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி பெற்றுக் கொள்கிறார். நூல் அறிமுக உரையை கழக மாணவர் அணித் தலைவர் இராஜீவ் காந்தி நிகழ்த்துகிறார்.*

*மேலும் த.பெ.தி.க. பிரச்சாரச் செயலாளர் சீனி விடுதலை அரசு, தி.மு.க. மாநில ஆதி திராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் சா. இராஜேந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்துகின்றனர் நிகழ்வை ‘திராவிடியன் ஸ்டாக்’ லட்சுமி தொகுத்து வழங்குகிறார் .*

*நன்றியுரையை லக்சிதா கௌதம் கூறுகிறார்.*

### ஒன்றியச் செயலாளர் - ஊராட்சி மன்றத் தலைவர் அ.ம.துரை வீரமணி தலைமையில்

# அயப்பாக்கம் ஊராட்சியில் ரூ. 57 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம்!

### மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அடிக்கல் நாட்டினார்!

*சென்னை, அக். 12*

*சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சியில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து 57 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டுதல் விழா அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவரும், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான அ.ம.துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது.*

*மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வகுப்பறை கட்ட அடிக்கல் நாட்டினார்.*

*இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் கருணாகரன், உதவி தலைமை ஆசிரியர் ஜானகிராமன், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் தேவன், பாஸ்கரன், கே.சங்கர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ப.ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் இரா. வினோத், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ.எம். யுவராஜா மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஏ.பி.பாபு மாறன்குமார், செல்வகுமார், ஜி.சண்முகம், கரன்கிங், ஏ.எஸ்.மூர்த்தி, செல்லதுரை, சேகர், ஸ்ரீதர், ராபர்ட், வெங்கடேசன், கண்ணன், சுதாகர், மாரி செல்வம், செண்பகவல்லி, ஷர்மிளா, கவிதா, ரேவதி மற்றும் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சியில், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ரூ.57 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டுதல் விழா அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவரும், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான அ.ம.துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது. மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வகுப்பறை கட்ட அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் கருணாகரன், ஜானகிராமன், தேவன், பாஸ்கரன், கே.சங்கர், ப.ராஜேந்திரன், இரா.வினோத், ஏ.எம்.யுவராஜா, ஏ.பி.பாபு மாறன்குமார், செல்வகுமார், ஜி.சண்முகம், கரன்கிங், ஏ.எஸ்.மூர்த்தி, செல்லதுரை, சேகர், ஸ்ரீதர், ராபர்ட், வெங்கடேசன், கண்ணன், சுதாகர், மாரி செல்வம், செண்பகவல்லி, ஷர்மிளா, கவிதா, ரேவதி மற்றும் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.